# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 159/2020.

## வழக்கு சாட்சி – அ.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. தனலெட்சுமி. | ஜாதி | |
| கணவர் பெயர் | ராஜசேனாதிபதி. | தொழில் | ஆசிரியர். |
| கிராமம் | தேனி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 56/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**அ.சா.2 – மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:–**

கடந்த 02.02.2020 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, காலை 09.00 மணிக்கு மேல் நான் வீட்டிலிருக்கும்போது, விபத்து நடந்தது சம்பந்தமாக எனக்குத் தகவல் கிடைத்தது. அ.சா.1–ன் தம்பி வெங்கடேசன் மற்றும் அன்னலெட்சுமி உணவகத்தில் வேலை செய்த நபரும் எனக்குப் போன் மூலமாக தகவல் தெரிவித்தார்கள் என்று நான் போலீசார் விசாரணையின்போது சொல்லியுள்ளேன். நான் தகவல் தெரிந்து காலை 10 மணிக்கெல்லாம் மருத்துவமனை சென்றுவிட்டேன். அங்கு, நான் எனது கணவரைப் பார்த்தேன். போலீசார் அங்கு வைத்து விசாரித்தார்கள். நான் சொன்னதுபோல், சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் எனக்குத் தகவல் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. மோட்டார் வாகன விதிகளுக்குட்பட்டும், சாலை விதிகளுக்குட்பட்டும், என் கணவர் வாகனத்தை இயக்கவில்லை என்றாலும், அவரே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றாலும் சரியல்ல.